# தமிழர் திருமணம்

-வைத்திய கலாநிதி இ. லம்போதரன்,கனடா-

knowingourroots@hotmail.com

தமிழர் திருமண முறைகள் பற்றிய குறிப்புகளும், விளக்கங்களும் எமது தொன்னூலாகிய தொல்காப்பியம் முதலாகப் பல நூல்களில் எடுத்தாளப்பட்டு, ஆவணப்படுத்தப்பட்டு, நடைமுறைப் பாரம்பரியமாக வந்துள்ள போதிலும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட இத்திருமண முறைகளின் அடிப்படை அம்சங்கள் பற்றிய கருத்தொருமைப்பாடும், புரிந்துணர்வும் பல்லினப்பண்பாட்டுத் தாக்கங்களினூடாக வளர்ந்து வருகின்ற எமது இன்றைய தலைமுறையினரிடையே, பொதுவாக தாயக தமிழ் மக்களிடையேயும், சிறப்பாக புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்களிடையேயும் அருகி வருகின்ற கால கட்டத்தில், ஏற்கெனவே பல பேரறிஞர்களும், தலைவர்களும் எடுத்தாண்ட இத் தலையங்கத்திலே சில விடயங்களை நினைவில் மீட்டுரைக்க வேண்டிய காலத்தின் தேவை கருதி இக் கட்டுரை கருவானது.

## பழந்தமிழர் திருமண மரபு

திருமணம் என்பது இரு மனங்கள் இணைவதாகும். **"காதலர் இருவர் கருத்தொருமித்து ஆதரவு பெற்றதே இன்பம்"** என்று ஔவையார் பாடல் ஒன்று கூறுகின்றது. கருத்தொருமித்த ஆணும் பெண்ணும் தனிமையில் இணையும் இயற்கைப் புணர்ச்சியே உண்மையில் திருமணம் ஆகும். அவ்வாறிருக்க திருமணத்தை ஒரு சமுதாயச் சடங்காக்கியதன் பின்புலம் என்ன என்று நாம் சிந்திக்க வேண்டியுள்ளது. இவ்வாறான இயற்கைப் புணர்ச்சியில் இணைவது இருவராக இருந்தாலும் இதனால் ஏற்படும் பாதிப்பு அன்றிலிருந்து இன்றுவரை பெண்ணுக்குத்தான். இதன் விளைவாக கருவுறுவது பெண்; குழந்தை பெறுவது பெண், அந்தக் குழந்தையை பாலூட்டி வளர்ப்பது பெண். இந்நிலையில் அவளின் கருவுக்குக் காரணமான ஆண் காதலிலும், கடமையிலும், பொறுப்பிலும் இருந்து தவறுவானாயின், பாதிக்கப்படுவது பெண் மட்டுமல்ல; அவளின் வயிற்றில் கருவாகி, உருவாகி வரும் எமது சமுதாயத்தின் எதிர் கால சந்ததியும்தான். ஆரோக்கியமாக இருந்த ஆண் பெண் உறவில் பொய்யும், ஏமாற்றும் புகுந்தபொழுது திருமணம் என்கின்ற சடங்கு உருவாக்கப்பட்டது என்று தொல்காப்பியம் கூறுகின்றது. **பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர், ஐயர் யாத்தனர் கரணம் என்ப-தொல்,பொரு-143.**

இன்றைய சமுதாயத்திலேயே பிரிவினால் ஏற்படும் தனி மனித, குடும்ப, பொருளாதார, சமூக, உளவியல் பாதிப்புகள் பாரியனவாக இருக்குமிடத்து, ஆணே பொருளீட்டுவோனாகவும், வழங்குவோனாகவும், பாதுகாப்போனாகவும் விளங்கிய அன்றைய சமுதாயத்திலே இதன் பாதிப்பு எத்துணை பாரியதாக இருந்திருக்கும் என்பதை நாம் ஊகித்தறியலாம். தனது பொறுப்பிலிருந்தும், கடமையிலிருந்தும் ஆண் வழுவாதவிடத்தும், போரினாலும், வேட்டையாலும், வீர விளையாட்டுகளாலும் அவனுக்கு எதிர்பாராத உயிரிழப்பு அல்லது ஊனம் ஏற்படுமிடத்து, பெண்ணுக்கும், அவள் வயிற்றிற் பிறந்த சந்ததியினருக்கும் உரிய

பாதுகாப்பையும், காப்புணர்வையும் வழங்குகின்ற பொறுப்பு உறவுகளையும் மூத்தோரையும் உள்ளடக்கிய திருமணச் சடங்குகளினூடாக சமுதாயத்தினிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதையும் காண்கின்றோம்.

இவ்வகையாக வகுக்கப்பட்ட பழந்தமிழர் திருமண முறைகளின் விபரங்களை தொல்காப்பியத்தில் காண்கின்றோம். கொள்ளுதற்குரிய மரபினையுடைய மணமகன் தனக்கு சடங்கு மூலமாகக் கொடுக்கப்படுகின்ற மணமகளை ஏற்றுக்கொள்ளுதல் கற்பு மணம் எனத் தொல்காப்பியம் கூறுகின்றது. **"கற்பெனப் படுவது கரணமொடு புணரக், கொளற்குரி மரபிற் கிழவன் கிழத்தியைக், கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே"-தொல்,பொரு-140.** அதேவேளை மற்றையோர் அறியாமல் காதலர் இருவரும் தாமே கூடிச் சேருவது களவு மணம் என்று அகத்துறை இலக்கியங்கள் பேசுகின்றன. இவ்வாறு கொள்வோரும், கொடுப்போரும் இல்லாமலும் கூடும் காதலர்கள் யாருமறியாமல் ஊரை விட்டு நீங்கி தமது வாழ்க்கையை தொடங்கும் வழமை உடன்போக்கு எனப்படுகின்றது. **"கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே, புணர்ந்து உடன் போகிய காலை யான"-தொல்காப்பியம்-பொரு-141.** அக்கால சாதிமுறைச் சமுதாயத்தில் அந்தணர், அரசர், வணிகர் ஆகிய முக்குலத்தோருக்கும் உரியதாகிய சடங்குடன் கூடிய திருமணம் நாலாவது சாதிக்காரருக்கும் உடையதாக இருந்தது என்றும் தொல்காப்பியம் கூறுகின்றது. **"மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம், கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டே "-தொல்காப்பியம்-பொரு-142.** அக்காலத்து வட நாட்டு மரபாக இருந்த வற்புறுத்திப் பெண்ணை எடுத்துச் சென்று புணரும் இராட்சத விவாகம் போன்ற எட்டு வகையான திருமண மரபுகளை பழந்தமிழர்கள் அறிந்திருந்தார்கள் என்பதும் தொல்காப்பியத்தினால் அறியக் கிடைக்கின்றது. **"மறையோர் தேயத்து மன்றல் எட்டனுள், துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே "- தொல்காப்பியம்- பொருள்-** 89. ஆயினும் முன்னர சொன்ன கற்பு நெறி, களவு நெறி தவிர்ந்த ஏனைய மரபுகள் தமிழர் திருமண நெறியாகக் கொள்ளப்பட்டதற்கான இலக்கிய, வரலாற்றுச் சான்றுகள் இல்லை.

இவ்வாறாக தொல்காப்பிய காலத்துக்கு முற்பட்ட கடல் கோள் கொண்ட காலத்துக்கு முன்னிருந்தே பலமான, உரமான பண்பாட்டு, வரலாற்று, இலக்கிய, இலக்கண, வாழக்கை மரபுடன் இணைந்த தமிழர் திருமண மரபு வழங்கி வந்திருப்பது புலனாகின்றது. இந்த மரபை இங்கு சங்க இலக்கியங்களில் வழங்கும் தமிழர் திருமண மரபாகவும், சமய இலக்கியங்களில் வழங்கும் தமிழர் திருமண மரபாகவும் இரண்டு விதமாகப் பகுத்து ஆராய்வது எனது நோக்கம். .

<u>சங்க இலக்கியங்களில் தமிழர் திருமண மரபு</u>

பழந்தமிழர் திருமண மரபை அறிவதற்கு அக நானூற்றின் 86 வது பாடலும், 136வது பாடலும் மிக முக்கியமான வரலாற்று இலக்கியச் சான்றுகளாக எமக்கு அமைகின்றன. தீவலம் போன்ற சடங்குகளோ, மறையோரோ இல்லாமல், உறவினருக்கு விருந்து படைத்து, முதியபெண்களே மணமக்களைச் சேர்த்து வைக்கும் நடைமுறையை நாம் இங்கு காண்கின்றோம்.

**உழுந்துதலைப் பெய்த கொழுந்தனி மிதவை, பெருஞ் சோற்று அமலை நிற்ப** என்று உழுத்தம் பருப்புடன் கூட்டிச் சமைத்த குழைவான பொங்கலொடு கூடிய விருந்து தொடர்ந்து நடைபெறுதலையும், **நிரை கால், தண் பெரும் பந்தர்த் தரு மணல் ஞெமிரி, மனை விளக்குறுத்து, மாலை தொடரி** என்று வரிசையாக பந்தல் கால்களை நட்டு, குளிர்ந்த பெரிய பந்தலினை அமைத்து, கொண்டு வந்த மணலைக் கீழே பரப்பி, மனையிலே விளக்குகளை ஏற்றி, மாலைகளைத் தொங்க விடுதலையும், **கனை இருள் அகன்ற கவின்பெறு காலை; கோள் கால் நீங்கிய கொடு வெண் திங்கள், கேடு இல் விழுப் புகழ் நாள் தலைவந்தென** என்று சந்திரன் உரோகிணி நட்சத்திரத்துடன் கூடிய திருமண நன்னாளையும், நற்பொழுதான காலை வேளையையும், **உச்சிக் குடத்தர், புத்தகல் மண்டையர், பொது செய் கம்பலை முது செம் பெண்டிர்** என்று மண்ஞ்செய்து வைக்கும் முதிய மங்களப் பெண்கள், தலையில் நிறை நீர்க் குடத்தினையும், கைகளில் மண்டை என்னும் அகல் விளக்கினையும் ஏந்தியவர்களாக வந்து ஒருங்கு கூடுதலையும், **முன்னவும் பின்னவும் முறை முறை தரத்தர** என்று முன்னே தருவனவற்றையும், பின்னே தருவனவற்றையும் முறை முறையாக அவர்கள் எடுத்துத் தந்த வண்ணம் இருந்ததையும், **புதல்வற் பயந்த திதலை அவ்வயிற்று, வால் இழை மகளிர் நால்வர் கூடி, 'கற்பினின் வழாஅ, நற் பல உதவிப், பெற்றோற் பெட்கும் பிணையை ஆக!' என, நீரொடு சொரிந்த ஈர் இதழ் அலரி, பல் இருங் கதுப்பின் நெல்லொடு தயங்க, வதுவை நல் மணம் கழிந்த பின்றை** என்று தூய அணிகலன்களை அணிந்த, தாய்மைப் பேறடைந்த மகளிர் நால்வர் கூடி நின்று, 'கற்பில் வழுவாது, நல்ல பலவற்றிலும் உதவியாக இருந்து, நின்னை மனைவியாகப் பெற்ற நின் கணவனைப் பேணிக் காக்கும் பெரு விருப்பத்தை உடையவளாயிருப்பாயாக' என்று நீரோடு குளிர்ந்த இதழ்களை உடைய மலர்களை நெல்லோடு சேர்த்து, மணமகளது தலையிலே தூவி வாழ்த்துவதோடு திருமணம் நிறைவு பெறுவதையும் இந்த எண்பத்தாறாவது அக நானூற்றுப் பாடலினூடாகக் காண்கின்றோம். இத்தோடு **கல்லென் கம்மையர், ஞெரேரெனப் புகுதந்து, 'பேர் இற்கிழத்தி ஆக' எனத் தமர் தர, ஓர் இற் கூடிய உடன் புணர் கங்குல்** என்று திருமணம் நிறைவுற்ற பின்னர் சுற்றத்தினர் கல்லென்ற ஒலியினராய் விரைந்து வந்து 'பெருமனைக் கிழத்தி ஆவாய்' எனக்கூறி, ஓர் இல்லில் மணமக்களை புணர்ச்சிக்குரிய முதல் இரவுக்காக கூட்டியதையும் கூட இந்தப்பாடல் தெளிவாகக் கூறுகின்றது. திருமணத்துக்காக மணமகள் அணியும் புதிய பட்டுப் புடவை பற்றிய குறிப்பை **கொடும் புறம் வளைஇ, கோடிக் கலிங்கத்து ஒடுங்கினள்** என்ற தொடரும் இப்பாடலின் வரிகளினூடாக எமக்கு அறியக்கிடைக்கின்றது.

இதே போல **மைப்புறப் புழுக்கி நெய்க்கனி வெண்சோறு, வரையா வண்மையொடு புரையோர்ப் பேணி** என்று நெய்மிக்க வெண்மையான சோற்றினை இறைச்சியுடன் சேர்த்துக் குற்றமற ஆக்கி, அளவற்ற வள்ளன்மையுடன் உயர்ந்தோரை உண்பிப்பதையும், **புள்ளுப்புணர்ந்து இனிய ஆக** என்று பறவைகளின் நன் நிமித்தம் பார்ப்பதையும், **தெள் ஒளி, அம்கண் இருவிசும்பு விளங்க, திங்கட் சகடம் மண்டிய துகள்தீர் கூட்டத்து** என்று வானம் தெளிவாக விளக்கமுறத் திகழ்ந்த, உரோகிணி நட்சத்திரத்துடன் சந்திரன் கூடி நிற்கின்ற, எல்லா இடர்களையும் நீக்கும் நன்னாள் திருமண நாளாவதையும், **கடிநகர் புனைந்து** என்று மணமனையை அழகு படுத்துவதையும்,**கடவுட் பேணி** என்று கடவுளை வழிபடுதலையும், **படுமண முழவொடு பரூஉப்பணை இமிழ,வதுவை மண்ணிய மகளிர் விதுப்புற்று** என்று மண முழவுடன் பெரிய முரசமும் முழங்க, மங்கல மகளிர்

மணமகளுக்கு மண நீராட்டுதலையும், **பூக்கணும் இமையார் நோக்குபு மறைய** என்று அவர்கள் தமது கூர்மையான கண்களால் மணமகளின் அழகை இமையாது பார்த்துச் சென்றதையும், **மென்பூ வாகைப் புன்புறக் கவட்டிலை, பழங்கன்று கறித்த பயம்புஅமல் அறுகைத், தழங்குகுரல் வானின் தலைப்பெயற்கு ஈன்ற, மண்ணுமணி அன்ன மாஇதழ்ப் பாவைத், தண்நறு முகையொடு வெண்நூல் சூட்டி, தூஉடைப் பொலிந்து மேவரத் துவன்றி,மழைபட் டன்ன மணல்மலி பந்தர், இழைஅணி சிறப்பின்** என்று மணமக்களுக்கு அறுகம் புல்லுடன் கூடிய மலர்களை வெண்மையான நூலில் தொகுத்து அணிவித்து, புத்தாடையால் பொலிவுறச்செய்து, மணப்பந்தலிலே அமர்த்தி சிறப்பான அணிகலன்களை அணிவிப்பதையும்,**பெயர்வியர்ப்பு ஆற்றி** என்று பந்தலில் அமர்ந்துள்ள மணமக்களின் வியர்வையை ஆற்றுதலையும்,**தமர்நமக்கு ஈத்த தலைநாள் இரவின்** என்று இவ்வாறாக மணவினையினூடாக கொடுக்கப்பட்ட மணமகளுடன் கூடும் முதல்நாள் இரவினையும் அகநானூற்றின் நூற்று முப்பத்தாறாவது பாடல் கூறுகின்றது.

எமது தாயகக் கிராமங்களிலே 'சோறு கொடுத்தல்' என்னும் எளிமையான உறவினர்களின் ஒன்றுகூடல் விருந்துடன் தாலி, தீ வலம் வருதல் போன்ற சடங்குகள் இல்லாமல் மணமக்கள் ஒன்று சேர்க்கப்பட்டு வருகின்ற வழமையினூடாக இன்றும் இம்மரபு எம்மிடையே தொடர்வதை நாம் காண்கின்றோம்.

<u>சமய இலக்கியங்களில் தமிழர் திருமண மரபு</u>

சங்க இலக்கியத் திருமண முறைகளுக்கு மாறாக அந்தணப் பெருமக்களூடாக நடத்தப்பெறுகின்ற, பல விதமான சடங்குகள் நிறைந்த, மேல்நிலையாக்க மரபுகளை நாம் சமய இலக்கியத் திருமணங்களில் காண்கின்றோம். இவ்வகையான திருமண முறைகள் பற்றிய விபரங்கள் சைவத் திருமுறைகளிலும், வைணவர்களின் நாலாயிர திவ்விய பிரபந்தத்திலும், ஐம்பெரும் காப்பியங்களிலும் ஆவணப்படுத்தப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

சைவர்களின் 12வது திருமுறையான பெரிய புராணத்திலே திருஞான சம்பந்தரின் திருமணம் பற்றி விரிவாகக் கூறப்பட்டுள்ளது. சம்பந்தர் தமிழினால் இறைவனைப் பாடிப் பரவிய பெருமகன். 'தமிழ் ஞானசம்பந்தன்' என்று தன்னைத் தனது பாடல்களில் இனங் காண்பவர். ஆதிசங்கரருடைய வடமொழிப் பாடலாகிய சௌந்தரிய லகரியில் கூட 'திராவிட சிசு' என்று அவரால் இனங்காணப்படுபவர். இவருடைய திருமணத்திலே **காதலியைக் காழிநா டுடையபிரான் கைப்பிடிக்க** என்று மணமகன் மணமகளின் கைபற்றுதல் பற்றியும், **மருவியவோ ரையுங்கணித மங்கலநா லவர்வகுப்பப், பெருகுமண நாளோலை பெருஞ்சிறப்பி னுடன்போக்கி** என்று திருமணத்துக்கு நல்ல நாள், நேரம் கணித்தலையும், திருமண அழைப்போலை அனுப்புதலையும், **நீடுநிலைத் தோரணங்கள் நீள்மறுகு தொறும்நிரைத்து, மாடுஉயரும் கொடிமாலை மணிமாலை இடைப்போக்கிச், சேடுஉயரும் வேதிகைகள் செழுஞ்சாந்து கொடுநீவிப், பீடுகெழு மணிமுத்தின் பெரும்பந்தர் பலபுனைந்தார்** என்றும் **முன்றில் தொறும் வீதிதொறும் முகநெடுவா யில்கள் தொறும், நின்றுஒளிரும் மணிவிளக்கு நிறைவாசப் பொற்குடங்கள்,**

**துன்று சுடர்த் தாமங்கள் தூபங்க துதைவித்தார்,** என்றும் தோரணங்கள் மலர் மாலை, மணி மாலைகள் கொண்டு பந்தர்கள் அமைத்து அலங்கரிப்பதையும், வாசலில் நீண்ட நேரம் நின்று எரியும் விளக்குகள், நிறைகுடம், அணிதற்குரிய வாசனைப் பதார்த்தங்கள், தூபங்கள் வைத்தலையும், **வேதியர் வதுவைக் கோலம் புனைந்திட வேண்டும் என்னப், பூதநா யகர்தங் கோயிற் புறத்தொரு மடத்திற் புக்கார்** என்று மணமகன் மணக்கோலம் பூணுவதற்கு தயாராவதையும், **பொற்குட நிறைந்த வாசப் புனிதமஞ் சனநீராட்டி, விற்பொலி வெண்பட் டாடை மேதக விளங்கச் சாத்தி, நற்றிரு உத்தரீயம் நறுந்துகில் சாத்தி நானப், பற்பல கலவைச் சாந்தம் பான்மையில் அணிந்த பின்னர்** என்று மணமகன் நீராட்டப்பட்டு, பட்டாடை, ஆபரணங்கள், வாசனைத்திரவியங்கள் அணிவித்து அலங்கரிக்கப்படுவதையும், **மாதர் மைந்தர்பொற் காப்புநா ணகர்வலஞ் செய்தார்** என்று மணமகன் ஊர்வலமாக வருவதையும், **காறு சூடினார் அருட்திருக் காப்புநா ண்அணிவார்** என்றும்,**பந்தச் சார்பொ ழிப்பவர் திருக்கையிற் காப்புநாண் சாத்த** என்றும், காப்புக் கட்டுதலையும், **முற்றுமெய்ஞ் ஞானம் பெற்ற மூர்த்தியார் செங்கை பற்ற, புண்ணிய விளைவு போல்வர் பூம்பந்தர் முன்பு சார்ந்தார்** என்று மணமகளைக் கைப்பிடிக்க பூக்களால் அமைக்கப்பட்ட மணவறைக்கு மணமகன் வருதலையும், **பெருமகிழ்ச் சியினாற் பாதம் விளக்குவார் பிள்ளையார்முன்** என்று மணமகளின் பெற்றோர் மணமகனின் பாதத்தை விளக்குதலையும், **பெருகொளி ஞான முண்ட பிள்ளையார் மலர்க்கை தன்னின், மருவுமங் கலநீர் வாசக் கரகமுன் னேந்தி வார்ப்பார், தருமுறைக் கோத்தி ரத்தின் தங்குலஞ் செப்பி என்றன், அருநிதிப் பாவை யாரைப் பிள்ளையார்க்(கு) அளித்தேன் என்றார்** என்று குலத்து முன்னோர்களின் வழிமுறையைக் கூறி, நீர் வார்த்து, தத்தம் செய்து, எனது மகளை உமக்கு அளித்தேன் என்று கன்னிகாதானம் செய்தலையும், **மறையொலி பொங்கி யோங்க மங்கல வாழ்த்து மல்க, நிறைவளைச் செங்கை பற்றி** என்று மங்கல இசையும், வேத ஒலியும் ஒலிக்க மணமகளின் கை பற்றுதலையும், **மந்திர முறையால் உய்த்த எரிவலமாக** என்று மணமக்கள் தீ வலம் வருவதையும் மணவினைச் சடங்குகளாக சேக்கிழார் அழகாகவும் விரிவாகவும் கூறுகின்றார்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞான சம்பந்தரின் திருமணம் பற்றிய விபரங்களை பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த சேக்கிழார் தமது பெரிய புராணத்தில் பாடியிருக்கும்பொழுது, இத் திருமணச் சடங்குகள் உண்மையிலேயே சம்பந்தர் காலத்து திருமண மரபுகளின் ஆவணப்படுத்தலா; அல்லது பன்னிரண்டாம் நூற்றாண்டின் சோழப்பேரரசின் உச்சநிலையில் வழங்கி வந்த மேல்நிலையாக்க ( Sanscritization) மரபுகளின் ஆவணப்படுத்தலா என்ற சந்தேகம் நமக்கு எழுகின்றது.

<u>நாச்சியார் திருமொழியில் தமிழர் திருமண மரபு;</u>

இந்த சந்தேகத்தை தீர்ப்பதற்கு கி.பி எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த வைணவ மங்கையான ஆண்டாளின் நாச்சியார் திருமொழி என்ற நாலாயிரத் திவ்வியப்பிரபந்தப் பாடல்களிலே வருகின்ற அவருடைய கனவுத் திருமணத்தின் விபரங்கள் உதவுகின்றன. ஆண்டாள் தன்னுடைய பாடல்களில் **நாளை வதுவை மணமென்று நாளிட்டு** என்று மணநாள் குறிக்கப்படுதலையும், **பூரண பொற்குடம் வைத்துப் புரமெங்கும் தோரணம் நாட்ட**

என்று எங்கும் நிறைகுடமும் தோரணமும் கொண்டு அலங்கரிப்பதையும், **பாளைகமுகு பரிசுடைப் பந்தற்கீழ்** என்று தென்னம்பாளை கமுகு கொண்டு மணப்பந்தல் அலங்கரிக்கப்பட்டிருத்தலையும், **வாரணமாயிரம் சூழவலம் செய்து, நாரண நம்பி நடக்கின்றான்** என்று மணமகன் ஊர்வலமாக வருதலையும், **கதிரொளி தீபம் கலச முடனேந்திச் சதிரிள மங்கையர் தாம் வந்தெதிர் கொள்ள** என்று ஆடல்களில் வல்ல அழகான இளம் பெண்கள் தீபம், குடம் முதலான மங்கலப்பொருட்களை ஏந்தி மணமகனுடன் வருவதையும், **கோடி யுடுத்தி மணமாலை அந்தரி சூட்ட** என்று மணமகள் மணமகனின் சகோதரியால் புத்தாடை உடுத்தப்பெற்று, மணமாலை சூட்டப்பட்டு அலங்கரிக்கப்படுவதையும், **பார்ப்பனச்சிட்டர்கள் பல்லார்** என்று அந்தணப் பெருமக்கள் மணவினையை நடத்தி வைப்பதையும், **புனிதனோடு என்னைக்காப்புநாண் கட்ட** என்று மணமக்களுக்குக் காப்பு கட்டுதலையும், **வாய் நல்லார் நல்ல மறையோதி மந்திரத்தால்** என்று வேதியர்கள் வேத மந்திரங்களை மணவினையில் ஓதுவதையும், **மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத, முத்துடைத் தாமம் நிரைதாழ்ந்த பந்தற்கீழ், மைத்துனன் நம்பி மதுசூதன் வந்தென்னைக், கைத்தலம் பற்ற** என்று மங்கல வாத்தியங்கள் ஒலிக்க, முத்து மணவறையின் கீழ் மணமகன் மணமகளின் கை பற்றுவதையும், **என் கைப்பற்றி தீவலஞ் செய்ய** என்று மணமக்கள் கைப்பிடித்து தீ வலம் வருவதையும், **செம்மை யுடைய திருக்கையால் தாள் பற்றி அம்மி மிதிக்க** என்று மணமகன் தன் கையால் மணமகளின் காலைப்பற்றி எடுத்து அம்மி மிதிக்க வைப்பதையும், **எரிமுகம் பார்த்து என் னைமுன்னே நிறுத்தி, அரிமுகன் அச்சுதன் கைம்மேல்என் கைவைத்து, பொரிமுகந்து அட்ட** என்று அக்கினியைப் பார்த்து, மணமகனுக்கு முன்புறமாக மணமகளை நிற்க வைத்து, மணமகனின் கைமேல் மணமகளின் கையை வைத்து, அதிலிருந்து பொரியை அக்கினியில் சொரிதலையும், **குங்குமம் அப்பிக் குளிர்சாந்தம் மட்டித்து மங்கலவீதி வலஞ் செய்து** என்று மணவினையின் பின்னர் மணமக்கள் ஊர்வலம் வருவதையும், அப்போது அவர்களுக்கு மக்கள் அலங்கார வாசனைத் திரவியங்களைச் சாத்துவதையும், **அங்கவனோடும் உடன்சென்றங்கு ஆனைமேல்** என்று மணவினையின் பின்னர் மணமகன் மணமகளுடன் யானையில் ஊர்வலம் வருவதையும், **மஞ்சனமாட்ட** என்று மணவினையின் பின்னர் களைப்பெல்லாம் தீர மணமக்கள் இருவரையும் வைத்து நீராட்டுதலையும் மிகவும் அழகாக, ஒழுங்காக, விபரமாகக் குறிப்பிடுகின்றார்.

<u>திருவாசகத்தில் தமிழர் திருமண மரபு</u>

இதே போல கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் மாணிக்கவாசகர் பாடிய திருவாசகம் **எங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று, அங்கப் பழஞ்சொல் புதுக்கும்** என்று காலம் காலமாக மணமகளின் பெற்றோர் இவ்வளவு நாளும் தமது பிள்ளையாக இருந்த பெண் இன்று தொடக்கம் உனக்கே அடைக்கலம் என்று மணமகனுக்குச் சொல்லி பெண்ணை ஒப்படைக்கும் கன்னிகாதான வழமையைக் கூறுகின்றது.

<u>சமண இலக்கிங்களில் திருமண மரபு</u>

இவ்வறாக சைவ இலக்கியங்களான திருமுறைகளிலும், வைணவ இலக்கியங்களின் தொகுப்பாகிய நாலாயிர திவ்விய பிரபந்தத்திலும் விபரிக்கப்பட்டும், ஆவணப்படுத்தப்பட்டும் உள்ள தமிழர் திருமண முறைகள் சமண சமய இலக்கியங்களான சிலப்பதிகாரம் மற்றும் சீவக சிந்தாமணி போன்றவற்றில் குறிப்பிடப்படுள்ள திருமண

முறைகளுடன் ஒத்துள்ளதை நாம் அவதானிக்கின்றோம். **முரசியம்பின; முருடதிர்ந்தன; முறை எழுந்தன பணிலம்; வெண்குடை, அரசெழுந்ததொர் படியெழுந்தன; அகலுள் மங்கல அணி எழுந்தது. மாலைதாழ் சென்னி வயிரமணித் தூணகத்து, நீல விதானத்து, நித்திலம்பூம் பந்தர்க்கீழ், வானூர் மதியம் சகடு அணைய, வானத்துச் சாலி ஒருமீன் தகையாளைக், கோவலன், மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத், தீவலம் செய்வது காணபார் கண் நோன்பு என்னை!** என்று 'விண்மீனாகத் திகழும் கற்புக்கரசியாம் அருந்ததிக்கு நிகரான கண்ணகியை, வானிலே சந்திரன் உரோகிணி நட்சத்திரத்தைச் சேருகின்ற நன்னாளிலே, வயதில் முதிர்ந்த அந்தணன் ஒருவன் வேத முறைப்படி வளர்த்த தீயை கோவலன் வலம் வந்து மணம் கொண்டான்' என ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம் கூறுகின்றது.

இதேவிதமாக அந்தணர்கள் தீ வளர்த்து, மந்திரம் ஓத, மணமக்கள் அக்கினி வலம் வந்து இணையும் திருமண முறை இன்னொரு ஐம்பெருங்காப்பியமான **சீவக சிந்தாமணி**யில் சீவகன் இலக்கணை திருமணத்தை விபரிக்கும் 2460 முதல் 2468 வரையுள்ள பாடல்கள் ஊடாகக் விபரிக்கப்பட்டிருப்பதைக் காண்கின்றோம்.

<u>வேறுபட்ட திருமண மரபுகளின் பொதுமைகள்</u>

இவ்வாறு சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற தமிழர் திருமண மரபு. சமய இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்ற தமிழர் திருமண மரபு இரண்டும் அன்றிலிருந்து இன்று வரை எமது தமிழ்ச் சமுதாயத்திலே நிலைகொண்டுள்ள இரண்டு வேறுபட்ட சமூக நிலைகளங்களின் தொன்மையான திருமண மரபு வெளிப்பாடுகளே. இவை இவ்வாறாக வேறுபட்ட சமூக நிலைக்களங்களின் வேறுபட்ட வெளிப்பாடுகளாயிருந்தாலும் எம்மிடையே நிலைகொண்டுள்ள இவ்விரு மரபுகளிடையே பல பொதுவான அம்சங்களைப் பார்க்கிறோம்.

- மணப்பெண்ணை ஒருவர் அல்லது ஒரு பகுதியார் கொடுக்க மணமகனும் அவன் பகுதியாரும் ஏற்கும் கொடுத்தலும் கொள்ளுதலுமாகிய முறைமை.
- திருமணத்தை நடத்தி வைப்பவர்கள்: வைதிகத் திருமணத்தில் வேத நெறிப்படி மறையோரும், சங்க இலக்கிய வழித் திருமண மரபில் மங்களமான முது மகளிரும் திருமணத்தை நடத்தி வைக்கும் வழமையைப் பார்க்கின்றோம்.
- திருமணத்துக்குரிய நல்ல நாள்: திருமணத்துக்கு நன்னாள் குறிக்கும் முறைமையை சங்க இலக்கியங்களிலும் சமய இலக்கியங்களிலும் காண்கின்றோம்..
- சமூகம் திருமணத்துக்கு சாட்சியாக அமையும் வழமையை இரண்டு திருமண மரபுகளிலுமே பாரக்கின்றோம். இது திருமணத்தின் ஒரு பகுதியாக உள்ள விருந்தோம்பலுடன் இணைந்துள்ளது. இது திருமணத்தில் இணைகின்ற தம்பதிகளுக்குரிய திருமணம் சார்ந்த தனிமனித கடமைகள், பொறுப்புகளையும், சாட்சியாக வந்துள்ள சமூகத்தினது திருமணம் சார்ந்த கடமைகள், பொறுப்புகளையும் வலியுறுத்துவதாக அமைகின்றன. இவற்றை மீறுவோர் சாட்சிகளின் வெறுப்பையும்,

நிராகரிப்பையும் சந்திக்க நேரிடும் என்ற மறைமுகமான அச்சம் அங்கு புகுத்தப்படுகின்றது.

- இரு வகையான மரபுகளிலும் திருமணமானது சடங்குகளினாலும், சமூகத்தினாலும் வாழ்வின் ஒரு முக்கிய நிகழ்வாக்கப்படுகின்ற வழமையைக் காண்கின்றோம்.

<u>தமிழர் திருமண மரபு- இன்றைய நிலையும் எதிர் காலமும்</u>

உலக மயமாக்கலின் நுகர்வோர் சமுதாயத்தில், பல்லினப்பண்பாட்டுச் சூழலில் வாழுகின்ற இன்றைய தலைமுறைத் தமிழர்களிடையே, தமிழர் திருமண முறைகள் பற்றிய மயக்கமும், குழப்பமும் நிலவுவதைக் காண்கிறோம். பொதுவாக தாயகத்திலும், குறிப்பாக புலம் பெயர்ந்த நாடுகளிலும் புற்றீசல் போல் பல்கிப் பெருகிப் வருகின்ற பல புதுமைகளும், பிற பண்பாட்டு வழக்குகளும் வழமைகளாக எமது திருமண முறைகளில் புகுந்து கொள்வதையும் காண்கின்றோம். இந்தச் சூழ்நிலையில் 'உண்மையிலே தமிழரின் திருமண முறை என்பது யாது? எமது வரலாற்றிலே, இலக்கியங்களிலே, பண்பாட்டிலே வழங்கி வந்த, வருகின்ற திருமண முறைகள் யாவை? எமது இன்றைய திருமணங்களிலே இடையிலே புகுத்தப்பட்ட சடங்குகள் யாவை? திருமணங்களிலே நாம் எமது பண்பாட்டுக்குப் புறம்பான சடங்குகளினாலும், புகுத்தப்பட்ட புதிய முறைகளினாலும் குழம்புகின்றோமா?' போன்ற பல வினாக்கள் எழுகின்றன.

இவ் வினாக்களுக்கு விடை கண்டு, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட பாரம்பரியம் நிறைந்த தமிழர் திருமண மரபுகளை வெறும் சரித்திரமாக்காமல், எமது அடுத்த தலைமுறைக்கு இவற்றை அர்த்தமுள்ள வாழ்நெறியாகவும் கொடுக்க வேண்டிய வரலாற்றுக் கடப்பாடும், தேவையும் எமக்கு உள்ளது. அதற்கு இவ்வாறான வரலாற்று, இலக்கிய, நடைமுறை ஆதாரங்களுடன் கூடிய தகவல்களின் பகிர்வும், மீட்டலும் பெரிதும் உதவும். இது பாரெங்கும் பரந்துபட்டு வாழும் எமது தமிழ் மக்களிடையே புரிந்துணர்வையும், ஒருமைப்பாட்டையும், பொறுப்புணர்வையும் பேணவும், மேலும் கட்டியெழுப்பவும், உதவும். அத்தோடு .ஒவ்வொரு தமிழ் இல்லத்திலும் நடைபெறுகின்ற திருமண வைபவங்களில் அவற்றை நடாத்துவிப்போரும், மணமக்களும், திருமணத்துக்கு வருகை தருகின்ற விருந்தினர்களும், மற்றோரும் எமது தமிழர் திருமண மரபு பற்றி அறிந்திருத்தல், தமிழர் திருமணத்தை மேலும் இரசனையும், அனுபவிப்பும், கலாச்சார பண்பாட்டு உடைமையும் உள்ள நிகழ்வாகப் பரிணமிக்கச் செய்யும என்பதில் ஐயமில்லை. .

.